DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.4 |
| Name | :இரகுபதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். நான் மைக்செட் நடத்தி வருகிறேன். 01.12.2019 அன்று எனது வீட்டிற்கு எதுத்த வீட்டில் உள்ள அ.சா.ஆ.1ன் வீட்டில் இருந்து காலை 10 மணியளவில் அழுகை சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான் என் பின்னாடி கார்த்தி, முத்துச்சாமி, லட்சுமணன் ஆகியோர்கள் சென்று அ.சா.1ன் வீட்டு மாடிக்கு சென்ற போது அங்கு அ.சா.1சிங்கம், அ.சா.2 அமுதா, மற்றும் பாலாஜியின் அக்கா தர்சினி ஆகியோர்கள் அழுது கொண்டு இருந்தார்கள். பாலாஜி மஞ்சள் கலர் துப்பட்டாவில் தூக்கில் தொங்கி கொண்டு இருந்தார். நாங்கள் பாலாஜியை மஞ்சல் கலர் துப்பட்டாவில் இருந்து கீழே இறக்கி பரிசோதனை செய்த போது அவன் மூச்சு பேச்சு எதுவும் இல்லை. பின்பு பாலாஜியின் தகப்பனார் சிங்கம் காவல்நிலையத்தில் சுமார் 11.00 மணியளவில் புகார் கொடுத்தார். அன்றைய தினம் உடலை மருத்து பரிசோதனை செய்து மாலையில் ஒப்படைத்தார்கள். இறந்த உடலை எங்கள் ஊர் சுடுகாட்டில் எரித்தார்கள். மறுநாள் இறந்த பாலாஜியின் சகோதரி தர்சினி அவருடைய நோட்டுப்புத்தகங்களை பரிசோதனை செய்த

போது இறந்த பாலாஜி அவனுடை ஒரு நோட்டில் அவனது இறப்பிற்கு காரணம் இரவி என்று எழுதிவைத்துவிட்டு அவனுக்கு தண்டணை வாங்கி கொடுக்குமாறு எழுதி இருந்தார். அந்த நோட்டை நான் பார்த்தேன். அந்த நோட்டை சிங்கம் காவல்நிலையத்தில் கொடுத்தார். என்னை சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

முதல் நாள் அ.சா.1 புகார் கொடுக்க சென்ற போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். வீட்டு வாசல் முன்னிலையில் மக்கள் மத்தியில் எழுதி வைத்த நோட்டுப்புத்தகத்தை தர்சினி காண்பித்தது. நான் அதை படித்துப்பார்த்தேன். என்னைப்போல் ஒரு 300 பேர் படித்துப்பார்த்தார்கள். நான் படித்துப்பார்த்த போது அதில் இரவிச்சந்திரன் ஆசிரியர் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான் இரவி என்று தான் எழுதப்பட்டு இருந்தது. அ.சா.1 என் தம்பி முறை வேண்டும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 09.06.2023
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.